**JUDICIAL MAGISTRATE COURT NO.1, PERAMBALUR**
**PRESENT: THIRU.R.RAJASEKARAN, L.L.M.,**
**Judicial Magistrate No.1 (FAC),**
**Perambalur.**

**CASE SUMMARY**

**C.C.45/2025, CNR NO.TNPB02-000358-2025**

| | | |
|---|---|---|
| 1. | The Period of remand of the accused | All Accused are released on Anticipatory Bail |
| 2. | The date of filing of the complaint/final report in the court | 30.01.2025/17.02.2025 |
| 3. | The date of committal of the case to the Court of Session | --- |
| 4. | The date of questioning of the accused u/s.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | 05.06.2025 |
| 55. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts; except routine petitions like petitions u/s.317 of the code | NIL |
| 6. | Date of examination in chief and cross examination of a witness | PW1 Chief examined on 09.07.2025<br>Cross examined on 31.12.2025<br>PW2 Chief examined on 09.07.2025<br>Cross examined on 31.12.2025<br>PW3 Chief examined on 09.07.2025<br>Cross examined on 31.12.2025<br>PW4 Chief & Cross examined on 07.01.2026<br>PW5 Chief & Cross examined on 21.01.2026<br>PW6 Chief & Cross examined on 04.03.2026 |
| 7. | Date of examination of the accused u/s.351(1)(b) of BNSS | 18.03.2026. |
| 8. | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and | NIL |
| 9. | Grant of stay by superior courts and the results thereof | NIL |

*(Sd/-).R.Rajasekaran*
Judicial Magistrate No.1 (FAC),
Perambalur.

Date:15.04.2026 JM-1, Perambalur

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, பெரம்பலூர்**

**முன்னிலை : திரு.இரா.இராஜசேகரன், எல்.எல்.எம்.,**
**நீதித்துறை நடுவர் எண்.1 (மு.கூ.பொ.),**
**பெரம்பலூர்.**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாள் புதன்கிழமை

**2057** திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் சித்திரை மாதம் **2** ம் நாள்

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.**45/2025**
**CNR NO.TNPB02-000358-2025**

தமிழ்நாடு அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
பெரம்பலூர் காவல் நிலையம்,
குற்ற எண்.826/2024 – குற்றமுறையீட்டாளர்.

/ எதிர் /

1.ராஜா (38/2025),
த/பெ. சுந்தரராஜ்.
2.பிராபாகரன் (36/2025),
த/பெ.முத்துசாமி.
3.சக்திவேல் (27/2025),
த/பெ.தங்கராசு.
4.நாகராஜ் (47/2025),
த/பெ. சிதம்பரம்.
5.கமலசெல்வன் (32/2025),
த/பெ.கலைவாணன்.
6.வினித் (23/2025),
த/பெ.ராஜமாணிக்கம்.
7.செல்வகுமார் (50/2025),
த/பெ. சுப்ரமணியன்.
8.ரெங்கராஜீ (50/2025),
த/பெ.நல்லு.
9.செல்வராஜ் (32/2025),
த/பெ.முத்துசாமி.
10.ராமகிருஷ்ணன் (44/2025),
த/பெ. சுந்தராஜ்.
11.தமிழரசன் (35/2025),
த/பெ.ராமலிங்கம்.
12.கிருஷ்ணா (எ) கிருஷ்ணபிரசாந்த் (30/2025),
த/பெ.ராமைய்யா.

13.வெங்கடேசன் (எ) வெங்கடேஷ்குமார் (31/2025),
த/பெ.செல்வராஜ்.

1 முதல் 10 எதிரிகள் அனைவரும் களரம்பட்டி கிராமம்,
11 முதல் 13 எதிரிகள் அனைவரும் அம்மாபாளையம் கிராமம்,
பெரம்பலூர் வட்டம் மற்றும் மாவட்டம்
என்ற முகவரியைச் சேர்ந்தவர்கள். – எதிரிகள்

இந்த வழக்கு கடந்த 17.02.2025 ஆம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு, என் முன்னால் 15.04.2026 ஆம் தேதியான இன்று இறுதி விசாரணைக்கு வந்ததில், அரசு தரப்பில், அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.ஸ்ரீராம் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற சீரிய பரிசீலனையில் இருந்து, இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் திருமதி. ஹேமா என்பவர் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் வட்டம் செட்டிகுளம் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் மற்றும் தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும், மேற்படி திருக் கோவிலின் குழுக்கோவிலான பெரம்பலூர் வட்டம் மற்றும் மாவட்டம் களரம்பட்டி அருள்மிகு தேம்படியம்மன் திருக்கோவிலின் திருக்குடமுழுக்கு விழா கடந்த 08.09.2024 அன்று நடைபெற்றதில் விழாவில் சிறப்பு செய்வது தொடர்பாக களரம்பட்டி கிராமத்தை சேர்ந்த பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர்களுக்கும், தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் பெரம்பலூர் வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் இரு தரப்பினருக்கும் இடையே அமைதி பேச்சு வார்த்தை உடன்பட்டு சிறப்பாக விழா நடைபெற்றதாகவும், அதனை தொடர்ந்து மேற்படி கோவிலுக்கு மண்டலாபிஷேகம் சிறப்பு செய்வது தொடர்பாக மீண்டும் இரு தரப்பினருக்கும் இடையே கருத்து

வேறுபாடு ஏற்பட்டதால் சார் ஆட்சியர் அவர்கள் முன்னிலையில் அமைதி பேச்சு வார்த்தை நடத்தியதில் முடிவெடுக்கப் பட்டதாகவும், ஆனால் மண்டலாபிஷேக பூர்த்தி நாளான 28.10.2024 அன்று களரம்பட்டி தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர்கள் தேங்காய் பழம், பூஜை பொருட் களுடன் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி எடுத்து கோவிலுக்குள் வந்ததால் இருதரப்பினருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டதை தடுக்கும் பொருட்டு பேசியபோது களரம்பட்டி பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த இவ்வழக்கின் எதிரிகள் அனைவரும் புகார்தாரர் பிரச்சனையை தடுக்கும் பொருட்டு பேசிய போது புகார்தாரரை அநாகரிகமாக பேசி அவரை பணி செய்ய விடாமல் தடுத்துள்ளார்கள். எனவே 1 முதல் 13 வரையிலான எதிரிகளின் செய்கையானது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 191(2), 296(b), 132–ன் கீழ் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக பெரம்பலூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் 1 முதல் 13 எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2) பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 230 ன் கீழ் நகல் வழங்குதல்:**

1 முதல் 13 எதிரிகளுக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு, 1 முதல் 13 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். 1 முதல் 13 எதிரிகளுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 230 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3) குற்றச்சாட்டு வனைந்து குற்றம் பற்றி வினவுதல்**

1 முதல் 13 எதிரிளுக்கு போதுமான கால அவகாசம் அளித்து அதன் பின்னர் ஆவணங்களின் பரிசீலனையின் பேரில், 1 முதல் 13 எதிரிகளின் மீது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 191(2), 296(b), 132–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் விளக்கி கூறி வினவியபோது, 1 முதல் 13 எதிரிகள் தங்களது மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து வழக்கு விசாரணை வேண்டினார்கள். அதன் பின்னர் அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**4) அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம்:**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.6 வரையான சான்றாவணங்கள் ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ குறியீடு செய்யப்படவில்லை.

**5) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:**

5) (i) அரசு தரப்பில் நிகழ்நிலை புகார்தாரர் ஹேமாவதி என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில், நான் செட்டிக்குளத்தில் உள்ள ஏகாமபரேஷ்வரர் தண்டாயுதபாணி கோவிலில் செயல் அலுவலராக பணியாற்றி வருகிறேன். மண்டல பூஜையின் கடைசி தினத்தில் மதியம் 12.00 மணி அளவில் 25 லிருந்து 30 பேர் வரை ஷேர் ஆட்டோவில் தேவேந்திரகுல வேளாளர் தரப்பினர் கோவிலுக்கு சிறப்பு செய்வதற்காக பூஜை பொருட்களுடன் வந்தனர். பிற்படுத்தப்பட்டோர் தரப்பினர் ஏற்கெனவே சார் ஆட்சியர் பேச்சுவார்த்தை நடத்தியபோது அவர்களை ஒவ்வொரு குடும்பமாக வந்து பூஜை நடத்துமாறு கூறியுள்ளார் என்றும், இப்போது வேண்டுமென்றே அவர்கள் அனைவரும் வந்துள்ளனர் என்றும் அவர்களை தடுத்து பிரச்சனை செய்தனர். அந்த இடத்திற்கு டி.எஸ்.பி., அறநிலையதுறை உதவி ஆணையர், ஆய்வாளர் மற்றும் அறநிலைய துறை அரசு அலுவலர்கள் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தனர். பிரச்சனை செய்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினை சேர்ந்த ராஜா, பிரபாகர், சக்திவேல், நாகராஜ், கமலச்செல்வன், வினித், செல்வராஜ், செல்வக்குமார், ராமகிருஷ்ணன், கிருஷ்ணா, வெங்கடேசன், தமிழரசன், ரெங்கராஜ் ஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்து அநாகரிகமாக எங்களை பேசி எங்கள் பணியை செய்யவிடாமல் தடுத்தனர். இது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலீஸார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5) (ii) அரசு தரப்பில் கண்ணுற்ற சாட்சிகளாக இந்துசமய அறநிலையத்துறை ஆய்வாளர் திருமதி.தீபலெட்சுமி என்பவர் அ.சா.2 ஆகவும், களரம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திருமதி.பிரியா அ.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

மேற்படி அ.சா.2, அ.சா.3 ஆகியோர் தங்களது நீதிமன்ற சாட்சியத்தில், மண்டல பூஜையின் கடைசி தினத்தில் 28.10.2024 அன்று மதியம் 12.00 மணி அளவில் கும்பலாக வந்து தேவேந்திரகுல வேளாளர் தரப்பினர் கோவிலுக்கு சிறப்பு செய்வதற்காக பூஜை பொருட்களுடன் வந்தனர். பிற்படுத்தப்பட்டோர் தரப்பினர் ஏற்கெனவே சார் ஆட்சியர் பேச்சுவார்த்தை நடத்தியபோது அவர்களை ஒவ்வொரு குடும்பமாக வந்து பூஜை நடத்துமாறு கூறியுள்ளார் என்றும், இப்போது வேண்டுமென்றே அவர்கள் அனைவரும் வந்துள்ளனர் என்றும் அவர்களை தடுத்து பிரச்சனை செய்தனர். அந்த இடத்திற்கு டி.எஸ்.பி., அறநிலைதுறை உதவி ஆணையர், ஆய்வாளர் மற்றும் அறநிலைதுறை அரசு அலுவலர்கள் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தனர். பிரச்சனை செய்த பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த தரப்பினர் ராஜா, நாகராஜ், வினித், சக்திவேல், ராமகிருஷ்ணன், செல்வக்குமார், செல்வராஜ், தமிழரசன், கிருஷ்ணா, வெங்கடேஷ், பிரபாகரன் ஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்து அநாகரிகமாக எங்களை பேசி எங்கள் பணியை செய்யவிடாமல் தடுத்தனர். இது தொடர்பாக அறநிலையதுறை செயல் அலுவலர் அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள்.

5) (iii) அரசு தரப்பில் பார்வை மகஜர் சாட்சியான ராஜபூபதி என்பவர் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.4 தனது நீதிமன்ற சாட்சியத்தில், என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். தேதி மாதம் வருடம் நியாபகமில்லை. சுமார் 1 வருடம் இருக்கும். 1 வருடத்திற்கு முன்பு நான் எனது காட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது போலீசார் கேட்டுக்கொண்டதற்காக வெள்ளைத்தாளில் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5) (iv) இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த திரு.செந்தில்ராஜா என்பவர் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.5 தனது சாட்சியத்தில், அ.த.சா.ஆ.3 மனு ரசீது குறித்தும், அ.த.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

5)(v) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் அய்வாளர் திரு.சதீஸ்குமார் என்பவர் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.6 தனது சாட்சியத்தில், அ.த.சா.ஆ.5 பார்வை மகஜர் குறித்தும், அ.த.சா.ஆ.6 மாதிரி வரைபடம் குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**6) பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 351(1)(ஆ)வின் கீழ் வினவுதல் :**

அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிந்த பின்னர், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை விளக்கி கூறி பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 351(1)(ஆ)வின் கீழ் விசாரித்த போது 1 முதல் 13 எதிரிகள் சாட்சிகள் கூறியது பொய் என்று தெரிவித்துள்ளார்கள். மேலும் எதிரிகள் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சியம் உண்டு என தெரிவித்தார்கள். இருப்பினும் எதிரிகள் தங்களது தரப்பில் யாரையும் சாட்சியாக முன்னிலைப்படுதவில்லை.

**7) அரசுத் தரப்பு வாதம்:**

கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை 1, தனது வாதத்தின் போது, அரசு தரப்பு சாட்சிகள் 1 முதல் 13 எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதாலும், மேலும், சான்றாவணங்கள் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.6 வரையில் குறியீடு செய்யப் பட்டுள்ளதாலும், 1 முதல் 13 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதம் செய்துள்ளார்.

**8) 1 முதல் 13 எதிரிகள் தரப்பு வாதம் :**

1 முதல் 13 எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தின் போது, அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் புலன் விசாரணை அதிகாரியிடம் விசாரணையின் போது கொடுத்த வாக்குமூலத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், தனி நபர் சாட்சிகள் யாரும் எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்காததாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.5 மற்றும் புலன் விசாரணை அதிகாரி அ.சா.6 ன் சாட்சியத்தின் அடிப்படையில் 1 முதல் 9 எதிரிகள் குற்றவாளிகள் என தீர்மானிக்க போதுமான சாட்சிய சான்றாவணங்கள் இல்லாத நிலையில், 1 முதல் 13 எதிரிகள் மீதான அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று வாதம் செய்துள்ளார்.

**9)** இந்த வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், 1 முதல் 13 வரையிலான எதிரிகளின் மீதான பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 191(2), 296(b), 132–ன் கீழான குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய சங்கதிகள் ஆகும்.

**தீர்வு**

**10)** இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சம்பவம் குறித்து நீதிமன்றம் நம்பத்தகுந்த வகையிலும், எவ்வித முரண்பாடுகள் இல்லாமலும், பொருண்மையை ஒரேவிதமாக குறிப்பிட்டு அமைய வேண்டும். அந்த வகையில் இவ்வழக்கின் சாட்சியங்கள் மேற்படி வகைமுறைகளுக்கு உட்பட்டு அமைந்திருக்கிறதா? என்பதே பரிசீலிக்கப்பட வேண்டும்.

**11) (i)** அ.சா.1 தனது புகார் மனுவான அ.த.சா.ஆ.1ல் "களரம்பட்டி அருள்மிகு தேம்பாடியம்மன் திருக்கோயிலின் திருக்குடமுழுக்கு விழா மண்டலாபிஷேக பூர்த்தி நாளான 28.10.2024 அன்று களரம்பட்டி தேவேந்திரகுல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர்கள் தேங்காய் பழம் பூஜை பொருட்களுடன் எவ்வித முன் அறிவிப்பும் இன்றி கோவிலுக்குள் வந்தால் இருதரப்பினருக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டதை தடுக்கும் பொருட்டு பேசியபோது களம்பட்டி பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த 1.ராஜா த/பெ.சந்தர்ராஜ், 2.பிரபாகரன் த/பெ.முத்துசாமி, 3.சக்திவேல் த/பெ.தங்கராசு 4.நாகராஜ் த/பெ.இளங்கோவன் 5.கமலசெல்வன் த/பெ.கலைவாணன் 6.வினித் த/பெ.ராஜமாணிக்கம், 7.செல்வக்குமார் த/பெ.சுப்ரமணியன் 8.ரெங்கராஜ் த/பெ.நல்லு 9.செல்வராஜ் சத்திரமனையார் வீடு, 10.ராமகிருஷ்ணன், 11.அம்மாபாளையத்தைச் சேர்ந்த தமிழரசன் த/பெ.ராமலிங்கம் 12.கிருஷ்ணா த/பெ.ராமையா, 13.வெங்கடேசன் ஆகிய அனைவரும் ஒன்றாக சேரந்து கொண்டு கலகத்தை தூண்டும் விதமாக நடந்துவர்களிடம் நான் பிரச்சனையை தடுக்கும்பொருட்டு அவர்களிடம் பேசிய போது அவர்கள் அனைவரும் அநாகரிகமாக பேசி என்னை பணி செய்யவிடாமல் தடுத்த மேற்படி நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

11) (ii) மேற்படி, 1 முதல் 13 எதிரிகளின் மீதான பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 296(b)ன் கீழான குற்றச்சாட்டானது மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்துப் பார்க்கையில், அ.சா.1 முதல் அ.சா.13 ஆகியோர் தங்களது நீதிமன்ற சாட்சியத்தில், எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து அநாகரிகமாக எங்களை பேசி எங்கள் பணியை செய்யவிடாமல் தடுத்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள்.

11 (iii) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் முன்தீர்ப்பில் Hon'ble High Court of Madras Madurai Bench citation 2022(1) MWN(Cr.) 442 observed that – "Mere uttering of obscene words not sufficient to prove offence u/s. 294(b) There must be further proof to establish that it was to annoyance of others" என்று வழிகாட்டியுள்ளது. அதன்படி இவ்வழக்கின் அ.சா.1 ன் சாட்சியத்தை நன்கு பரிசீலனை செய்கையில், மேற்படி சாட்சிகளை 1 முதல் 13 எதிரிகள் என்ன வார்த்தைகள் சொல்லி அநாகரிகமாக பேசினார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி அ.சா.1 தன்னை 1 முதல் 13 எதிரிகள் திட்டியதால் அருவருப்போ, தொல்லையோ தனக்கோ மற்ற நபர்களுக்கோ ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 ஆகியோரரும் 1 முதல் 13 எதிரிகள் தங்களை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அ.சா.1 ஐ 1 முதல் 13 எதிரிகள் திட்டியதால், அருவருப்போ, தொல்லையோ ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. இது குறித்து புலன் விசாரணை அதிகாரியனா அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில், *எதிரிகள் அவரை என்ன தகாத வார்த்தை சொல்லி திட்டினார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்* என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே, மேற்படி அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களை நன்கு பரிசீலனை செய்கையில், 1 முதல் 13 எதிரிகள் என்ன வார்த்தை சொல்லி திட்டினார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் மேற்படி 1 முதல் 13 எதிரிகளின் செய்கையால் தனக்கு அருவருப்போ தொல்லையோ ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1 முதல் 13 எதிரிகள் மீதான பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 296(b)–ன் கீழான குற்றச்சாட்டு அரசுத்

தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**12) (i)** 1 முதல் 13 எதிரிகள் மீதான பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 132 ன் கீழான குற்றச்சாட்டானது மெய்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்துப் பார்க்கையில், பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 ராஜுபூபதி தனது முதல் விசாரணையில், தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். தேதி மாதம் வருடம் நியாபகமில்லை. சுமார் 1 வருடம் இருக்கும். 1 வருடத்திற்கு முன்பு நான் எனது காட்டில் வேலை செய்து கொண்டிருந்தபோது போலீசார் கேட்டுக்கொண்டதற்காக வெள்ளைத்தாளில் கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்று அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணாக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.4 ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் விதமாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12(ii) அ.சா.1 தனது சாட்சியத்தில், பிற்படுத்தப்பட்டோர் தரப்பினர் ஏற்கனவே சார் ஆட்சியர் பேச்சுவார்த்தை நடத்தியபோது தேவேந்திரகுல வேளாளர்களை ஒவ்வொரு குடும்பமாக வந்து பூஜை நடத்துமாறு கூறியதாகவும், இப்போது வேண்டுமென்றே அவர்கள் அனைவரும் வந்துள்ளதாக கூறி அவர்களை தடுத்து பிரச்சனை செய்தனர் என்றும், அப்போது DSP, ஆய்வாளர் மற்றும் அரசு அலுவலர்கள் வந்தார்கள். எதிரிகள் ராஜா, பிரபாகரன், சக்திவேல், நாகராஜ், கமலச்செல்வன், வினித், செல்வராஜ், செல்வக்குமார், ராமகிருஷ்ணன், கிருஷ்ணா, வெங்கடேசன், தமிழரசன், ரெங்கராஜ் ஆகியோர் அனைவரும் சேர்ந்து எங்கள் பணியை செய்யவிடாமல் தடுத்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 ன் சாட்சியத்தை நன்கு பரிசீலனை செய்கையில், எதிரிகள் என்ன விதமாக அ.சா.1 ன் பணியை செய்யவிடாமல் தடுத்தனர் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அ.சா.1 தன்னை எதிரிகள் பணி செய்யவிடாமல் தடுத்ததால் தனக்கு அச்சமோ, பயமோ ஏற்பட்டதாகவோ, அ.சா.1 ஆல் தொடர்ச்சியாக தன்னுடைய பணியை செய்ய முடியாமல் போனது என்றோ குறிப்பிட்டு சாட்சியம்

அளிக்கவில்லை. எனவே, அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் விதமாக சாட்சியம் அமையவில்லையென்று இந்நீதிமன்றம் கருதுகிறது

12(iii) மேலும், அ.சா.2, அ.சா.3 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், பிற்படுத்தப்பட்டோர் தரப்பினர் ஏற்கனவே சார் ஆட்சியர் பேச்சுவார்த்தை நடத்தியபோது தேவேந்திரகுல வேளாளர்களை ஒவ்வொரு குடும்பமாக வந்து பூஜை நடத்துமாறு கூறியதாகவும், இப்போது வேண்டுமென்றே அவர்கள் அனைவரும் வந்துள்ளதாக கூறி அவர்களை தடுத்து பிரச்சனை செய்தனர் என்றும், அப்போது DSP, ஆய்வாளர் மற்றும் அரசு அலுவலர்கள் வந்தார்கள் என்றும், எதிரிகள் எங்கள் பணியை செய்யவிடாமல் தடுத்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி அ.சா.2, அ.சா.3 ஆகியோரின் சாட்சியத்தை நன்கு பரிசீலனை செய்கையில், 1 முதல் 13 எதிரிகள் என்ன விதமாக தங்கள் பணியை செய்ய விடாமல் தடுத்தார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், 1 முதல் 13 எதிரிகள் பணி செய்ய விடாமல் தடுத்ததால் தங்களுக்கு அச்சமோ, பயமோ ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் 1 முதல் 13 எதிரிகளின் செய்கையினால் தொடர்ச்சியாக தங்களது அரசு பணியை செய்ய முடியாமல் போனது என்றோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, மேற்படி அ.சா.2, 3 ஆகியோரின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் விதமாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே 1 முதல் 13 எதிரிகளுக்கு எதிரான பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 132ன் கீழான குற்றச்சாட்டை அரசுத் தரப்பு நியாயமான சந்தேகத்திற் கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13)(i) 1 முதல் 13 எதிரிகள் மீதான பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 191(2)ன் கீழான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது முதல் விசாரணையில், *28.10.2024 அன்று கடைசி நாள் பூஜையாக மண்டல சிறப்பு பூஜை நடந்து முடிந்துவிட்டது. பிறகு சார் ஆட்சியர் பேச்சு வார்த்தை நடத்தும்போது ஒவ்வொரு குடும்பமாக வந்து பூஜையில் கலந்துகொள்ளுமாறும், கும்பலாக வராமல் இருக்க அறிவுறுத்தினார். பிறகு மண்டல*

*பூஜையின் கடைசி தினத்தில் 28.10.2024 அன்று மதியம் 12.00 மணி அளவில் கும்பலாக வந்து தேவேந்திரகுல வேளாளர் தரப்பினர் கோவிலுக்கு சிறப்பு செய்வதற்காக பூஜை பொருட்களுடன் வந்தனர். பிற்படுத்தப்பட்டோர் தரப்பினர் ஏற்கெனவே சார் ஆட்சியர் பேச்சுவார்த்தை நடத்தியபோது அவர்களை ஒவ்வொரு குடும்பமாக வந்து பூஜை நடத்துமாறு கூறியுள்ளார் என்றும், இப்போது வேண்டுமென்றே அவர்கள் அனைவரும் வந்துள்ளனர் என்றும் அவர்களை தடுத்து பிரச்சனை செய்தனர்* என்று சாட்சியம் அளித்துள்ளார்.

13(ii) மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தை நன்கு பரிசீலனை செய்கையில், 1 முதல் 13 எதிரிகள் சட்டவிரோதமாக ஒன்று கூடினார்கள் என்றோ, கலகம் ஏற்படுத்தும் எண்ணத்துடன் வந்தார்கள் என்றோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் விதமாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13(iii) மேற்படி அ.சா.2, அ.சா.3 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் 1 முதல் 13 எதிரிகள் அசிங்கமாக திட்டினார்கள் என்று மட்டும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி அ.சா.2, அ.சா.3 சாட்சியத்தை நன்கு பரிசீலனை செய்கையில், 1 முதல் 13 எதிரிகள் சட்ட விரோதமாக ஒன்றுகூடினார்கள் என்றோ, கலகம் ஏற்படுத்தும் எண்ணத்துடன் வந்தார்கள் என்றோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அ.சா.2, அ.சா.3 ஆகியோரின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் விதமாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, 1 முதல் 13 எதிரிகளுக்கு எதிரான பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 191(2)–ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14)** மேற்படி அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை ஒத்துரைக்கும் விதமாக சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக அ.சா.1 முதல் அ.சா.6 சாட்சிகள் ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே, இந்த வழக்கின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையிலும், 1 முதல் 13 வரையிலான எதிரிகளின் மீதான பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 191(2),

296(b), 132ன் கீழான குற்றசாட்டுகள் அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லையென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது..

**15)** இறுதியாக, 1 முதல் 13 வரையிலான எதிரிகளின் மீதான பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 191(2), 296(b), 132–ன் கீழான குற்றசாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை 1 முதல் 13 எதிரிகளுக்கு அளித்து, 1 முதல் 13 எதிரிகளை மேற்கூறிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, 1 முதல் 13 எதிரிகளை பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**16)** 1 முதல் 13 எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் இரத்து செய்யப்பட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

**17)** இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை என்பதால், அது குறித்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப்பகரப்பட்டது.

*(ஒம்/–).இரா.இராஜசேகரன்*
நீதித்துறை நடுவர் எண்.1 (மு.கூ.பொ.),
பெரம்பலூர்.

**<u>இணைப்பு</u>**

**<u>1. அரசு தரப்பில் விசாரித்துக்கொள்ளப்பட்ட சாட்சிகள்</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | –– | திருமதி. ஹேமாவதி (நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் செயல் அலுவலர்) |
| அ.சா.2 | –– | திருமதி. தீபலெட்சுமி(அறநிலையத்துறை ஆய்வாளர்) |
| அ.சா.3 | –– | திருமதி.பிரியா (கிராம நிர்வாக அலுவலர்) |

| | | |
|---|---|---|
| அ.சா.4 | -- | திரு. ராஜபூபதி |
| அ.சா.5 | -- | திரு. செந்தில்ராஜா (சிறப்பு உதவி ஆய்வாளர்) |
| அ.சா.6 | -- | திரு. சதீஸ்குமார் (காவல் ஆய்வாளர்) |

**2. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | -- | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2 | -- | பார்வை மகஜரில் உள்ள அ.சா.4 ன் கையெழுத்து |
| அ.த.சா.ஆ.3 | -- | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததற்கான மனு ரசீது |
| அ.த.சா.ஆ.4 | -- | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.5 | -- | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.6 | -- | மாதிரி வரைபடம் |

**3. அரசு தரப்பு சான்று பொருட்கள் : இல்லை.**
**4. 1 முதல் 13 எதிரிகள் தரப்பு சாட்சி : இல்லை.**
**5. 1 முதல் 13 எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை.**
**6. 1 முதல் 13 எதிரிகள் தரப்பு சான்றுபொருட்கள் : இல்லை.**

*(ஒம்/-).இரா.இராஜசேகரன்*
நீதித்துறை நடுவர் எண்.1 (மு.கூ.பொ.),
பெரம்பலூர்.

குறிப்பு
1. விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

Particulars Under Rule 106 of Criminal Rules of Practice 2019
Description of the accused

| SNo. | Cr.No. | Name of the Police | Name of the accused | Father's name | Occupation | Residency | Age |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 826/2024 | Perambalur PS | Raja | S/o. Sundaraj | -- | Kalarampatti | 38/2025 |
| 2. | 826/2024 | Perambalur PS | Prabakaran | S/o.Muthusamy | -- | Kalarampatti | 36/2025 |
| 3. | 826/2024 | Perambalur PS | Sakthivel | S/o.Thangarasu | -- | Kalarampatti | 27/2025 |
| 4. | 826/2024 | Perambalur PS | Nagaraj | S/o.Chithambaram | -- | Kalarampatti | 47/2025 |
| 5. | 826/2024 | Perambalur PS | Kamalaselvan | S/o.Kalaivanan | -- | Kalarampatti | 32/2025 |
| 6. | 826/2024 | Perambalur PS | Vinith | S/o.Rajamanickam | -- | Kalarampatti | 23/2025 |
| 7. | 826/2024 | Perambalur PS | Selvakumar | S/o.Subramaniyan | -- | Kalarampatti | 50/2025 |
| 8. | 826/2024 | Perambalur PS | Rengaraji | S/o.Nallu | -- | Kalarampatti | 50/2025 |
| 9. | 826/2024 | Perambalur PS | Selvaraj | S/o.Muthusamy | -- | Kalarampatti | 32/2025 |
| 10. | 826/2024 | Perambalur PS | Ramakrishnan | S/o.Sundaraj | -- | Kalarampatti | 44/2025 |
| 11. | 826/2024 | Perambalur PS | Tamilarasan | S/o.Ramalingam | -- | Ammapalayam | 35/2025 |
| 12. | 826/2024 | Perambalur PS | Krishna @ Krishanprasanth | S/o.Ramaiya | -- | Ammapalayam | 30/2025 |
| 13. | 826/2024 | Perambalur PS | Venkatesan @ Venkateshkumar | S/o.Selvaraj | -- | Ammapalayam | 31/2025 |

Date of

| Occurrence | complaint | Apprehension | Release on bail | Commitment | Commence of Trial | Close of trial | Sentence or order | Service of copy of Judgment on accused | Explana-tion of delay |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28.10.2024 | 2.11.2024 | A1to A13-AB | A1to A13-AB | Not applicable | 09.07.2025 | 15.04.2026 | 15.04.2026 | - | No delay |

Judgment typed and Uploaded by – Steno Typist – Gr.III – M.Selvaraju

Date:15.04.2026 JM-1, Perambalur